பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 551331 ★ ரிஜிஸ்ரேஷ்: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.எல்.டி.

மலர்: 20] சென்னை: கார்த்திகை 7 (22—11—72) புதன் [illegible]: கார்த்திகை 8 (23—11—72) [illegible] [இதழ்: 132

கோவை மாவட்டத்தில் உரேனியம்---தோரியம்

கோவை, நவ. 22—

கோவை மாவட்டத்தில் அவினாசி—பல்லடம்—திருப்பூர் தாலுகாக்களில் உரேனியம்—தோரியம் போன்ற ரேடியக் கதிரியக்கப் பொருட்களைக் கண்டுபிடிக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த இடங்களிலும், சென்னிமலை பகுதியிலும் ரேடியக் கதிரியக்கம் காணப்படுகிறது.

[illegible] ஆய்வு நடத்த அணு[illegible] ஆய்வுக் குழு அதிகாரி கோவை மாவட்டத்தில் முகாமிட்டிருக்கிறார்.

இந்திரா கட்சி ஆளும் மாநிலத்தில் சட்டம்---அமைதி சீர்குலைந்தது

மாநிலமெங்கும் கட்டுக்கடங்காத கலவரம்

மூன்று இடங்களில் துப்பாக்கிச் சூடு--12 பேர் பலி

ஐதராபாத், நவ. 22—

இந்திரா காங்கிரசு ஆளும் ஆந்திர மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு கட்டுக்கடங்காத நிலை ஏற்பட்டுள்ளது.

பல இடங்களில் மாணவர்கள்மீது போலீசார் சுட்டதில் 12 பேர் மாண்டிருக்கிறார்கள்; மாநிலம் முழுவதும் மாணவர்கள் போராட்டம் வலுத்துள்ளது

'முல்கி' விதியை எதிர்த்து ஒரு சாராரும்--ஆதரித்து மற்றொரு சாராரும் போராட்டம் நடத்தி வருவது தெரிந்ததே!

நேற்று தெனாலி- ஓங்கோல்--அதோனி ஆகிய இடங்களில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

தெனாலியில் இரண்டு முறை நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஆறு பேர் மாண்டனர்; அதோனியில் இருவரும், ஓங்கோலில் நால்வரும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாயினர்.

அதோனி இரயில் நிலையத்தில் பத்தாயிரம் பேர் கூடி சூறையாடல் செய்து ஒரு இரயில் போகிக்குத் தீ வைத்தபோது போலீசார் சுட்டனர்.

ஓங்கோல் இரயில் நிலையத்தையும், தலைமை அஞ்சல் நிலையத்தையும் ஐயாயிரம் பேர் சூழ்ந்துகொண்டு கொளுத்தினர்.

கலெக்டரின் ஜீப் காருக்கும் தீ வைத்தனர்; பத்திய போலீசு வண்டிக்கும், அரசாங்க பஸ் ஒன்றுக்கும் தீ வைத்தனர்.

தெனாலியில் 5,000 பேர் கூடி இரயில் நிலையத்தைத் தாக்கித் தீ வைத்தனர்; பின்னர், தீ யணைக்க விரைந்துவந்த தீ யணைப்புப் படையையும் தடுத்து நிறுத்தினர்.

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

டர்டு ஏக்கர் ரூ. 105; பாக்கியுள்ள ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு—ரூ. 120.

குதிரைப் பந்தய வரி

குதிரைப் பந்தய வரி பற்றிய அவசரச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

குதிரைப் பந்தயங்களில், குதிரைகள்மீது பந்தயம் கட்டுவோருக்கு விதிக்கப்படும் வரியுடன்கூட கூடுதல் வரியும் விதிக்கப்பட்டிருக்கிறது; இதற்கான திருத்தம், தமிழ்நாடு குதிரைப் பந்தய வரிச் சட்டத்தில் 1971-ம் ஆண்டு செய்யப்பட்டது; ஆனால் இந்தத் திருத்தச் சட்டத்தில் குதிரைப் பந்தயத்தின்போது கவுண்டர்களில் பணம் கொடுத்து டிக்கெட்டு வாங்கும்போது அதற்குக் கூடுதல்வரி (சர்சார்ஜ்) விதிக்க வகையில்லாமல் இருந்தது.

ஆயினும், இந்தத் தொகைகள் மீதும் கடந்த சனவரி 1-ந் தேதி முதல் கூடுதல் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு வசூல் செய்யப்படுவதை சட்டபூர்வமாக ஆக்கவும்--இனியும் தொடர்ந்து இத்தகைய கூடுதல் வரியை வசூலிக்கவும் இந்த அவசரச் சட்டம் வகை செய்கிறது.

ஆளுநர் பிறப்பித்துள்ள இரு அவசரச் சட்டங்கள்

விவசாய வருமானவரி விலக்கு வரம்பு உயர்த்தப்படுகிறது

குதிரைப் பந்தய வரியில் கூடுதல் வரி விதிக்கப்படுகிறது

சென்னை, நவ. 22—

தமிழ்நாடு விவசாய வருமான வரிச் சட்டத்தைத் திருத்த ஓர் அவசரச் சட்டத்தையும்--குதிரைப் பந்தய வரிச் சட்டத்தைத் திருத்தி மற்றொரு அவசரச் சட்டத்தையும் தமிழ்நாடு ஆளுநர் கே. கே. ஷா பிறப்பித்தார்.

தமிழ்நாடு விவசாய வருமான வரி (திருத்த) அவசரச் சட்டத்தின்கீழ் விலக்கு வரம்பு 7½ ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 10 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு உயர்த்தப்படுகிறது; வருமானத்துக்கான விலக்கு வரம்பும் ரூ. 4,000-த்திலிருந்து ரூ. 5 000-த்துக்கு உயர்த்தப்படுகிறது; அதாவது ரூ. 5,000 வரை வருமானம் உள்ள விவசாயிகள், இனிமேல் வருமானவரி செலுத்த வேண்டியதில்லை.

விவசாய வருமான வரி திருத்த மசோதா, கடந்த ஆண்டு 19-ம் நாள் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது; ஆகஸ்டு 13-ம் நாளன்று அது சட்டப் பேரவையில் நிறைவேற இருந்தது; ஆனால், தொடங்கிய அன்றைக்கே சட்டப் பேரவை தள்ளி வைக்கப்பட்டு விட்டால் இந்த மசோதா (நகல் சட்டம்) நிறைவேற முடியாமல் போய்விட்டது.

இந்த மசோதா 1972 ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்தே நடைமுறைக்கு வரவேண்டியிருந்தாலும், 1971-ம் ஆண்டு சட்டம் செயல்படுத்தப்படாததாலும் மசோதாவின் பிரிவுகள் உடனடியாகச் சட்டமாவது அவசியம் என்று கருதப்பட்டதால், இந்த அவசரச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தோட்டப் பயிர்களல்லாத பயிர்களுக்கு வரம்பு எதுவுமின்றி கம்பவுண்டிங்முறை அனுமதிக்கப்படும்.

தோட்டப் பயிர்களுக்கான கம்பவுண்டிங் வரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 50 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு உயர்த்தப்படுகிறது; கம்பவுண்டில் விகிதங்களும் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

பாக்கு--திராட்சை--கரும்பு, வாழை--நிலக்கடலை (பாசன வசதியுள்ளது)--பருத்தி (பாசன வசதியுள்ளது) தென்னை போன்ற சில பயிர்களுக்கு ஸ்டாண்டர்டு ஏக்கரை கணக்கிடுவது சம்பந்தமாகவும் சில சலுகைகளை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

டிரஸ்டுகளிலிருந்து--அறநிலைய டிரஸ்டுகளாய் இருந்தாலும் சரி—தரும ஸ்தாபனங்களாக இருந்தாலும் சரி—இவற்றிலிருந்து கிடைக்கும் விவசாயவருமானம், மொத்த விவசாய வருமானத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.

1961-ம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் கீழ் மொத்த வருமானத்தைக் கணக்கிடுவதில் டிரஸ்டிகளின் வருமானத்திற்கு விலக்களிக்கப்பட்டிருப்பது போல, விவசாய வருமானத்திலும்இந்தவிலக்கு அளிக்கப்படும்.

அவசரச் சட்டத்தின்படி திருத்தப்பட்ட கம்பவுண்டிங் விகிதங்கள் வருமாறு:—

முதல் 10 ஸ்டாண்டர்டு ஏக்கர்--ஒன்றும் இல்லை; அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கர்--ரூ. 15; அதற்கு அடுத்த 5 ஸ்டாண்டர்டு ஏக்கர்—ரூ. 45; அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கர்—ரூ. 60; அடுத்த பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர்—ரூ. 75; அடுத்த 10 ஸ்டாண்டர்டு ஏக்கர்—ரூ. 90; அடுத்த 10 ஸ்டாண்

(1-ம் பத்தி பார்க்க)

ஆச்சாரியார் மனக்குழப்பம்

[★]

'பைத்தியக்காரனுக்குக் கள் ஊற்றியதுபோல்'

நிலை தடுமாறுகிறார்

தந்தை பெரியார் படப் பிடிப்பு

'இராஜாஜியின் பரிதாப நிலை' என்ற தலைப்பில் தந்தை பெரியார் அவர்கள், 21-11-72 'விடுதலை' இதழில் எழுதியிருப்பதாவது:—

"சென்ற நவம்பர் 11-ந்தேதி திரு. எம். ஜி. ஆர்., இராஜாஜி அவர்களின் வீட்டிற்குப்போய் சந்தித்து, அவரிடம் ஆசி பெற்றாராம்!

அதைப் பற்றி 'சுதேசமித்திரன்' 'பானர்' செய்தி வெளியிட்டதில், 'பத்து ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஆரம்பித்திருக்க வேண்டிய ஒரு இயக்கத்தை இப்போதுதான் நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள்' என்று கூறப்பட்டிருக்கிறது.

ஊழல்--இலஞ்சம் என்பதை எதிர்த்து எம்.ஜி.ஆர். பத்து ஆண்டுகளுக்கு முன்பே இப்படி ஒரு இயக்கத்தைத் தொடங்கி இருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அமைச்சர் திரு. இராசாராம் அவர்கள், இராயப்பேட்டையில் நான் பேசிய கூட்டத்தில் (11-11-72) கலந்து கொண்டு பேசுகையில், 'இராஜாஜி அவர்கள் 10 ஆண்டுகளுக்கு முன்பே இப்படி ஒரு இயக்கம் தொடங்கியிருக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்; தி. மு. க. ஆட்சிக்கு வந்தே 5 ஆண்டுகள்தான் ஆகின்றன; ஊழல்—இலஞ்சம் என்பதெல்லாம் பழைய காங்கிரசு ஆட்சிக் காலத்திலேயே தோன்றியது என்பதை இன்னமும் மறக்கவில்லை பார்த்தீர்களா?' என்று கூறி—அவரது குழப்பத்தைத் தெளிவாக விளக்கினார்.

அக்கிரகாரம் பத்திரிகையான 'சுதேசமித்திரன்' உடனே அடுத்த நாள் இராஜாஜி அவர்களுடன் தொடர்புகொண்டு ஒரு அறிக்கையை—இந்த ஓட்டையை மறைப்பதற்கு—வாங்கி, அதன் 12-11-72 இதழின் முதல் பக்கத்தில் வெளியிட்டது.

"பத்து ஆண்டுகளுக்கு முன்பு இது நடந்திருந்தால் நானும் பல இடங்களுக்குப் போய் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்திருப்பேன்' என்று சொன்னேன்; அதற்கு அவர் (எம். ஜி. ஆர்.) உங்கள் ஆசியுடன் எல்லாம் செய்வோம்' என்றார்; இதுதான் பத்து வருடக் கதை; அதை வைத்துக் கொண்டு யுக்தி செய்வதில் பயனில்லை" என்று அவ்வறிக்கையில் குறிப்பிட்டார்.

ஆச்சாரியாருக்கு, எவ்வளவு மனக்குழப்பம்?--தடுமாற்றம் உள்ளது என்பதற்கு இதுவே ஒரு வேடிக்கையான எடுத்துக்காட்டு ஆகும்.

ஒரு தவறுக்குச் சப்பைக் கட்டுக் கட்டப் போய் இன்னொரு பெரிய தவறை அல்லவா அவர் செய்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது?

10 ஆண்டுக்குமுன் மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய இயக்கம் எதற்குத் தேவைப்பட்டது? மதுவிலக்கு ரத்தாகி இப்போது ஒரு ஆண்டுதானே ஆகிறது? முன்பு மதுவிலக்கு அமுலில்தானே இருந்தது?

அவர் எவ்வளவு தடுமாற்றம்--குழப்பத்திற்கு ஆளாகி இருக்கிறார் பார்த்தீர்களா?

"தமிழக சட்டசபையில் முதல்வர் கருணாநிதிக்கு ஆதரவில்லை; அதனால்தான் சட்ட சபையை கவர்னா புறோரோக' செய்தார்; எனவே, ஜனாதிபதி ஆட்சியைப் பிரகடனம் செய்ய வேண்டும்" என்று எழுதியதும் இந்த மனக்குழப்பத்தின் கோளாறின் தொடர்ச்சிதான் என்பது புரியவில்லையா?

இல்லையானால், எனது மதிப்புக்குரிய நண்பர் இராஜாஜி, இவ்வளவு கீழ்த்தரமாக--பைத்தியக்காரனுக்குக் கள் ஊற்றியது போல்' நிதானம் தவறி பேசுவாரா? எழுதுவாரா?"

அடுத்த 'கிளைமாக்ஸ்' காட்சி எப்போது?

சினிமாப் படம் எடுப்பவர்கள் கதையின் துவக்கத்திலிருந்து காட்சிகளை வரிசையாக எடுக்க மாட்டார்கள்; கதையில் வரும் உச்சகட்டக் (கிளைமாக்ஸ்) காட்சிகளைத்தான் முதலில் எடுப்பார்கள்; அதன் பிறகு வாய்ப்பு வசதிகளைப் பொறுத்து—முன்பின்னுக் காட்சிகளைப் படமாக்கி—இறுதியில்தான் வரிசைப்படுத்தி முழுப் படத்தை [illegible] வார்கள்!

ஏன் இப்படிச் செய்கிறார்கள்? முதலிலிருந்து கடைசிவரை முறையாகப் படம் எடுக்கக் கூடாதா? எடுக்கலாம்; ஆனால் எடுப்பதில்லை; இப்படி எடுப்பதன் 'மர்மம்' சினிமாத் துறையில் உள்ளவர்களுக்கு நன்றாகப் புரியும்!

எடுக்கின்ற படம், படம் பார்ப்பவர்களைக் கவர்ந்தால் மட்டும் போதாது — படவினியோகஸ்தர்களையும் கவரவேண்டும்; அவர்களைக் கவரக்கூடிய காட்சிகளுக்குத்தான் — சினிமா பாஷையில் — 'கிளைமாக்ஸ் சீன்' என்று பெயர்!

பட வினியோகஸ்தர்களை எப்படியாவது கவர்ந்தால்தான் படம் எடுப்பதற்கான முதலே தேறும்; இல்லையென்றால், வெறுங் கையால் முழம்போட யாரால் முடியும்?

சினிமாப் படம் எடுக்கும் முறைக்கும் — திருவாளர் எம். ஜி. இராமச்சந்திரனார் நடத்தும் அரசியலுக்கும் இவ்வளவு சம்பந்தம் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை.

சினிமாத் துறையில் தனக்குள்ள நீண்டநாள் அனுபவத்தையும், செல்வாக்கையும் முதலாகக் கொண்டுதானே அவர் கட்சியே ஆரம்பித்தார்? இதைத் தவிர வேறு அவரிடம் 'முதல்' ஏது?

அவரே திருவண்ணாமலையில் சொல்லிவிட்டாரே — 'என்னிடம் காணயம் (பணம்) இல்லை' என்று! பாவம் — கையில் பணமில்லாத நிலையில் — படம் எடுப்பவர் நிலையில் இன்று புரட்சித் தலைவரும் கட்சிநடத்தவேண்டியிருக்கிறது!

அதனால்தான் இவரும், அரசியலில் சில 'கிளைமாக்ஸ்' காட்சிகளை எடுத்த எடுப்பிலேயே உருவாக்கிக் காட்டியிருக்கிறார்!

புதுக் கட்சி பிறந்த ஒரு மாதத்துக்குள் எத்தனை எத்தனைப் போராட்ட அறிவிப்புகள்! எத்தனை எத்தனைப் புதுப்புது அதிர்வேட்டுகள்! அப்பப்பா — இந்தத் துணிச்சல் வேறு எந்தக் கட்சித் தலைவருக்குத்தான் வரும்?

ஊர்வலம் — ஊர்வலம் — அர்த்தால் — குடியரசுத் தலைவரிடம் மனு அளிப்பு — சட்டமன்றத்தை ஒத்தி வைக்கச் செய்தல் — இவ்வளவையும் ஒரு மாதத்துக்குள் செய்து காட்டிவிட்டு, இப்போது இன்னொரு போராட்டத்துக்கும் அறிவிப்புக் கொடுத்துவிட்டாரே!

'எம். எல். ஏ. வீட்டுமுன் ஆர்ப்பாட்டம்' என்ற பெயரால் ஒரு போராட்டம்! இது நடந்து முடிந்ததும் முடியாததுமாக மற்றொரு போராட்டம் காத்திருக்கிறது — அதுதான் 'வரி கொடா இயக்கம்'! எப்படி நமது 'வாத்தியாரி'ன் 'கிளைமாக்ஸ்' காட்சிகளின் வரிசை?

இந்தியாவிலேயே வாத்தியாருக்கு ஈடு வாத்தியார்தான்! வாத்தியார்கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சிக்குத் இந்த துணிவு வரும்?

ஓர் அரசியல் கட்சி தோன்றி — வளர்ந்து, திட்டங்கள்—கொள்கைகளை அறிவித்து, அவற்றிற்கு நாட்டு மக்களிடையே எந்த அளவுக்கு ஆதரவு இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்ட பிறகுதான் போராட்டங்களைத் துவக்குவது வழக்கம்; அதுவும் தேவை என்றால்தான் போராட்டத்தைத் துவக்குவார்களே தவிர, போராட்டத்தை யாரும் தேடிப்போக மாட்டார்கள்!

நம்முடைய வாத்தியார் அதைப் பற்றியெல்லாம் சிறிதும் கவலைப்படவில்லை; அரசியல் கட்சிகளுக்குப் போராட்டங்கள்தான் கிளைமாக்ஸ் — அதை வைத்துத்தான் கட்சியையே வளர்க்க வேண்டும் — என்பது அவருடைய கொள்கை! கட்சி வளருகிற வரை காத்துக் கொண்டிருக்க முடியுமா?

கட்சியை ஆரம்பித்துப் பல ஆண்டுக்காலம் போராட்டமே நடத்தாமல் இருந்தவர்களெல்லாம் அரசியல் அறிவு இல்லாதவர்கள் என்றுதான் அர்த்தம்!

'பயிர் வளர்ச்சிக்கு [illegible] எப்படி முக்கியமோ அப்படி — கட்சி வளர்ச்சிக்குப் போராட்டம் முக்கியம்' என்ற சித்தாந்தத்தை உருவாக்கி— முதன் முதலில் நாட்டுக்கு அறிவித்த பெருமை நமது வாத்தியாரையே சாரும்! இதற்காக அவருக்கு 'பாரத்' பட்டத்தைவிடப் பெரிய பட்டம் கிடைத்தாலும் கிடைக்கக் கூடும்!

தன்னிடம் 'ரெடிமேடாக' வைத்துக் கொண்டுள்ள போராட்டத் திட்டங்களையெல்லாம் அடுத்தடுத்து அறிவித்து—இரண்டு மாதத்துக்குள் நடத்தி முடித்துவிட்டுத்தான் ஓய்வது என்று அவர் முடிவெடுத்துவிட்டார்! கட்சி அமைப்பு — கொள்கை வகுப்பு — சட்டதிட்டங்கள் உருவாக்கம் என்பதெல்லாம் பின்னர்தான்!

முதலில், போராட்டம் — போராட்டம் — போராட்டம் — இதுதான் புதுக்கட்சி கண்ட மூலவரின் புரட்சித் திட்டம் — 'புரட்சித் தலைவர்' அல்லவா?

தமிழ்நாட்டில் மட்டுமல்ல — இந்தியத் துணைக்கண்டத்திலேயே வேறு எந்த அரசியல் கட்சித் தலைவர்களும் செய்யத் துணியாத காரியத்தை முதன்முதலாகச் செய்யத் துணிந்த புரட்சித் தலைவரை மனதாரப் பாராட்டுகிறேன்; எனது பாராட்டைப் பற்றிப் புரட்சித் தலைவர் சந்தேகிக்க வேண்டாம்; ஆனால், என்னுடைய சந்தேகங்களை மட்டும் தயவு செய்து அவர் நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வெள்ளைக்காரர்களை எதிர்க்கப் பிறந்த காங்கிரசுக் கட்சிகூட, பிறக்கும்போதே போராட்டத்துடன் பிறக்கவில்லை — சில ஆண்டுகள் பொறுத்துத்தான் போராட்டத்தைத் துவங்கிற்று!

பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட கழகத்தை ஆரம்பித்தவுடனேயே போராட்டத்தைத் துவக்கிவிடவில்லை — சில ஆண்டுகள் கழித்துத்தான் போராட்டம் தொடங்கினார்!

'போராட்டத்தை நான் தேடி அலையமாட்டேன் — போராட்டத்துக்குப் பயந்து ஓடி ஒளியவும் மாட்டேன்' என்று கூறிய பேரறிஞர் அண்ணாகூட அரசியலில் இன்றையப் புரட்சித் தலைவருக்கு இணையாக மாட்டார்தான்!

அண்ணாவையும் மிஞ்சக்கூடிய மாபெரும் அரசியல் தலைவராகி விட்ட புரட்சித் தலைவர், தனது கட்சிக்கு அண்ணாவின் பெயரைச் சூட்டியிருப்பதுதான் எனக்கு மனவேதனையை அளிக்கிறது; தயவு செய்து தனது கட்சியின் பெயருக்கு முன்னுள்ள அண்ணா என்ற சொல்லை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் 'புரட்சித் தலைவர்' என்ற பெயரைச் சேர்த்துக்கொள்ளும்படி எனது யோசனையைத் தாழ்மையோடு அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"அண்ணாவின் பெயரை உள்ள பூர்வமாகவா சேர்த்திருக்கிறேன்? ஏதோ ஒப்புக்கு — அண்ணாமீது உயிரையே வைத்துத் கொண்டிருக்கும் மக்களை மயக்குவதற்கு இப்படி ஒரு ஏற்பாடே தவிர, வேறொன்றுமில்லை" என்று புரட்சித் தலைவரே தனது நெருங்கிய சகாக்களிடம் கூறி வருவதாகவும் கேள்விப்பட்டேன்.

தனிக் குடித்தனம் எத்தனை நாளைக்கு? போகவேண்டிய இடத்துக்குக் கண்டோடு விரைவில் போய்ச் சேர்ந்துவிட்டால், கட்சி — அமைப்பு — கொள்கை — திட்டம் எல்லாம் வேண்டியதில்லையல்லவா? அதன் பிறகு நாலுபேர் நாலு கேள்விகளைக் கேட்கமாட்டார்கள் அல்லவா?

விரைவில் அந்தக் காரியத்தைப் புரட்சியார் செய்துவிடவேண்டும்; 'இந்திரலோக' யாத்திரையை முடித்துவிட வேண்டும்; ஆமாம் — இந்திரா கட்சிப் பிரவேசத்தைத்தான் சொல்லுகிறேன்!

இன்னும் ஒன்று பாக்கியிருக்கிறது; அதுதான் வரிகொடா இயக்கம்; அதையும் 'சட்டுப் புட்'டென்று நடத்திவிட்டால், ஒழிந்தது சனியன்!

'கடை விரித்தேன் — கொள்வாரில்லை — கட்டிவிட்டேன்' என்று கூறி, இந்திரா அம்மையாரிடம் 'ஞானஸ்நானம்' பெற்றுவிட்டால், பிறகு இந்த மாதிரியான 'புனிதப் போராட்ட'ங்களுக்கே தேவை இருக்காது!

இந்த நேரத்தில் எனக்கு ஒரு சந்தேகம்!

வரிகொடா இயக்கம் என்பது எங்கே — யார் யார் எப்படி நடத்துவது?

மகாத்மா காந்தி நடத்திய வரி கொடா இயக்கம் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேனேயன்றி, நேரில் பார்த்ததில்லை; எனவேதான், எனக்கு இந்தச் சந்தேகம் முண்டிக்கொண்டு கிளம்புகிறது; புரட்சித் தலைவர் என்மீது கோபப்படாமல் பதில் சொல்ல வேண்டும்.

வரி என்றால் எந்த வரி? மாநில அரசுக்குக் கொடுக்க வேண்டிய வரியை எதிர்த்தா — மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டிய வரியை எதிர்த்தா போராட்டம்?

மாநில அரசின் வரி என்றால், நில வரி இருக்கிறது — நீர் வரி இருக்கிறது — விற்பனை வரி இருக்கிறது — கேளிக்கை வரி இருக்கிறது — இன்னும் எத்தனையோ வரிகள் இருக்கின்றன!

மத்திய அரசின் வரி என்றால், வருமான வரி இருக்கிறது — சுங்க வரி இருக்கிறது — கலால் வரி இருக்கிறது — இப்படி எத்தனையோ வரிகள் இருக்கின்றன!

மத்திய — மாநில அரசுகளின் வரிகள் மட்டுமல்ல; மாநகராட்சி வரி — நகராட்சி வரி — ஊராட்சி வரி— இப்படி உள்ளாட்சி மன்றங்களின் வரிகள் பல உள்ளன!

இவற்றில் எந்த வரியைச் செலுத்த மறுக்கப் போகிறீர்கள்?

பொதுவாக எல்லா வரிகளையுமே எதிர்த்துப் போராடினால்தான் நல்லது; அப்போதுதான் வரி கொடாதவர்களின் பட்டியல் நீளும் — சிறை செல்லும் தியாகிகளையும் நிறைய காட்ட முடியும்!

சினிமாவுக்குப் போனால்கூட அதற்கு வரி உண்டு; சிகரெட் வாங்கினால்கூட அதற்கு வரி இருக்கிறது; இப்படித் தொட்டதற்கெல்லாம் வரி விதித்துள்ள இந்த ஆட்சியை எதிர்க்க வேண்டுமென்றால், என்னென்ன வரிகள் உள்ளனவோ அத்தனை வரிகளையும் எதிர்த்துப் போராட வேண்டும்; அப்போதுதான் கூட்டம் சேரும் — அரசாங்கமும் சமாளிக்க முடியாமல் திணறும்! அதை விட்டுவிட்டு ஒரு வரி— இரண்டு வரிகளை மட்டுமே எதிர்த்தும் பயனில்லை!

புரட்சித் தலைவரின் வேறு எந்தப் போராட்டம் வெற்றி பெற்றாலும் பெறாவிட்டாலும், வரி கொடா இயக்கம் நிச்சயம் வெற்றி பெறும் என்பது எனது உறுதியான நம்பிக்கை; இதில் ஒன்றும் எனக்குச் சந்தேகமில்லை.

வரி கொடா இயக்கம் துவங்குவதற்கு முன்பே, வரி கொடாமல் மற்றவர்கட்கு வழிகாட்டிக் கொண்டிருப்பவர் புரட்சித் தலைவர் என்பது 'உலகப் பிரசித்தம்'; பின்னால் தாம் நடத்த இருக்கும் போராட்டத்தை மனத்தில் கொண்டுதான் அவர், 'வருமான வரி' கொடாமல் காலங்கடத்திக் கொண்டு வந்தார்; இதைப் போய், 'வரி ஏய்ப்பு—வரி ஏய்ப்பு' என்று எதிரிகள் கூறுகிறார்கள்! அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள்; புரட்சித் தலைவரே — நீங்கள் வருமான வரியானாலும் சரி — வேறு எந்த வரியானாலும் சரி — அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்; உங்கள் சீடர்கட்கு வழிகாட்டும் வகையில் 'இனி எந்த வரியும் கொடுக்க மாட்டேன்' என்று அறிவித்து விடுங்கள்!

'சிறைச்சாலை என்ன செய்யும்' என்ற கொடுமுடி கோகிலத்தின் பழைய பாட்டு மறந்தாபோய் விட்டது! பார்த்துவிடலாம் ஒரு கை

—மா. செ.

மனிதாபிமானமுடன் பாகிஸ்தான் செயல்படுமா?

இந்தியா — வங்காளதேச அரசுகளின் முடிவு—ஆக்கமுறையில் செயல்பட பூட்டோ முன்வருவாரா?

புதுடில்லி, நவ. 21—

இந்தியாவில் காவலில் இருக்கும் பாகிஸ்தான் குடிமக்கள் — போர்க் கைதிகளின் குடும்பங்களைச் சேர்ந்த 6,000 பேர் பாகிஸ்தானுக்குத் திரும்பியனுப்பப்படுவர்; மனிதாபிமான முறையில், இந்தியா—வங்காள தேச அரசுகள் இவ்வாறு செய்வதென முடிவு எடுத்துள்ளன.

இதே மனிதாபிமான உணர்ச்சியுடன், பாகிஸ்தானில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அல்லது காவலில் வைக்கப்பட்டுள்ள எல்லா வங்காள தேசக் குடிமக்களும் வங்காள தேசத்துக்குத் திரும்புவதற்கு பாகிஸ்தான் அரசு அனுமதிக்குமென்று நம்புவதாக இரு அரசுகளும் கூறுகின்றன.

பாகிஸ்தான் ஒப்புதல் தெரிவித்துப் பதில் வந்ததும், இவர்களைத் திருப்பி அனுப்புவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நிறைவேற்றப்படும்.

"இந்தியா வசமுள்ள குடும்பத்தினர் எண்ணிக்கை 6006 என்று தற்காப்புத்துறையின் அறிக்கை கூறுகிறது.

பாகிஸ்தான் படைகள் சரணடைந்த நேரத்தில் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் 56,998 பேரும் — பயிற்சிபெற்ற படைகளைச் சேர்ந்தவர்கள் 18 289 பேரும் இருந்தனர்; அதாவது மொத்தம் போர்க் கைதிகள் 75 285 பேர்.

பாகிஸ்தான் குடிமக்களிடையில் 4 616 போலீசுக்காரர்களும், 1,628 பாகிஸ்தான் அரசாங்க ஊழியர்களும், பிற வகையைச் சேர்ந்தவர்கள் 3,963 பேரும் உள்ளனர்.

10,000 வங்காளப் பெண்கள்-குழந்தைகள் நாடுதிரும்புவர்

பாகிஸ்தான் அனுமதி

புதுடில்லி, நவ. 22—

வங்காளதேச விடுதலைக்குப் பிறகு பாகிஸ்தானில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற 10,000 வங்காளிப் பெண்கள் — குழந்தைகள் நாடு திரும்புவதற்கு அனுமதிக்கப் பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது; பாகிஸ்தான் அதிபர் பூட்டோவே இதை அறிவித்தார்.

"முஸ்லிம் வங்காளத்துக்கு 10,000 வங்காளிப் பெண்கள் — குழந்தைகளை அனுப்ப முடிவு செய்திருப்பதானது, 'அவர்களிடம் பாகிஸ்தானுக்குக் கெட்ட எண்ணம் இல்லை' என்பதைக் காட்டும் சமிக்ஞையாகும்" என்று பூட்டோ கூறினார்.

"பாகிஸ்தான் கைதிகளின் மனைவியர் — குழந்தைகளைத் திருப்பியனுப்ப இந்தியா முன்வந்ததற்குப் பதிலாக இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானில் 4 இலட்சம் வங்காளிகள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

சிதம்பரத்துக்குப் புதிய எக்ஸ்பிரஸ் பஸ் போக்குவரத்து

சென்னை, நவ. 21—

நேற்றுமுதல் சென்னையிலிருந்து சிதம்பரத்துக்குப் புதிய பஸ் போக்குவரத்து ஒன்று (ரூட் 146) தொடங்கப்பட்டிருக்கிறது.

இந்த எக்ஸ்பிரஸ் பஸ் தாம்பரம் - செங்கற்பட்டு — மதுராந்தகம் - திண்டிவனம் — விழுப்புரம் — பண்ருட்டி — கடலூர் வழியாகச் சிதம்பரத்துக்குப் போகும்.

சென்னையிலிருந்து காலை 11 மணிக்குப் புறப்பட்டு மாலை 6 மணிச்குச் சிதம்பரம் போய்ச் சேரும்.

சிதம்பரத்திலிருந்து காலை 9.45 மணிக்குப் புறப்பட்டு மாலை 4.45 மணிக்குச் சென்னை வந்து சேரும்.

கட்டணம் ரூ. 7.90 ஆகும்.

40 நாடுகளுக்கு 2 இலட்சம் சைக்கிள்கள்

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி

புதுடில்லி, நவ. 19—

"சுமார் 2 இலட்சம் சைக்கிள்கள் நடப்பு ஆண்டில் 40 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன"

என்று, வெளிநாட்டு வர்த்தகத் துறையமைச்சர் ஏ. சி. ஜார்ஜ் மக்களவையில் தெரிவித்தார்.

இந்தியத் தயாரிப்பாளர்களிடம் முடிவுறாமல் இருக்கும் ஆர்டர்களில் முக்கியமானவை வருமாறு:—

அமெரிக்காவிடமிருந்து சுமார் ரூ. 3.29 கோடி பெறுமானமுள்ள சுமார் 2 இலட்சம் சைக்கிள்களுக்கு இரு ஆர்டர்கள்.

இந்தோனேஷியாவிடமிருந்து சுமார் ரூ. 2.92 கோடி பெறுமானமுள்ள சுமார் ரூ. 1.92 இலட்சம் சைக்கிள்களுக்கு இரு ஆர்டர்கள்.

மேற்குஜெர்மனியிலிருந்துசுமார் சுமார் ரூ. 34 இலட்சம் பெறுமானமுள்ள மற்றொரு ஆர்டர்.

தனியார் துறையில் ஓட்டல்கள் கட்டக் கடனுதவி

புதுடில்லி, நவ. 20—

நாட்டிலுள்ள 14 முக்கிய நகரங்களில் தனியார் துறையில் மொத்தம் 33 ஓட்டல்களைக் கட்டுவதற்காக அரசு ரூ. 12.94 கோடி கடன் வழங்க இசைந்திருக்கிறது.

இந்த ஓட்டல்கள் ஆக்ரா — அவுரங்காபாத் — பெங்களூர் — பம்பாய் கல்கத்தா — பரோடா — ஐதராபாத் — செகந்திராபாத் — ஜெய்ப்பூர் — குலுமணலி — லக்னோ — சென்னை — புனா — ஸ்ரீநகர் — விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் கட்டப்படும்.

மத்திய சுற்றுலா — சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் டாக்டர் கரன் சிங் மக்களவையில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

'கழக அரசைக் காப்போம்'

சலவைத் தொழிலாளர் சங்கத் தலைவர் அறிக்கை

தமிழ்நாடு சலவைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் கே. புருஷோத்தமன் அறிவிப்பதாவது:—

கழகத்தையும் — கழக அரசையும் காப்போம்; நாவலர் ஆகியோரின் கரத்தை வலுப்படுத்துவோம்; அதற்காக எந்தவித தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறோம்.

சலவைத் தொழிலாளர் ஒருவரைச் சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்க நடைபெற்ற தி. மு. க. ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்திற்கு திரு. எம். ஜி. ஆர். வராததிலிருந்தே அவர் சலவைத் தொழிலாளர்களை அலட்சியமாகக் கருதுகிறார் என்று அன்றே வேதனைப்பட்டோம்; இன்று அவர் செய்யும் துரோகச் செயலுக்கு எங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சலவைத் தொழிலாளர்களுக்குத் தொழிற் கருவி வாங்க அரிசன நலத்துறை மூலம் காங்கிரசு ஆட்சியில் கடனாகத் தரப்பட்ட கடன்களை தி. மு. க. அரசு தள்ளுபடி செய்தது.

தி. மு. க. அரசு பிற்பட்டோர் நலத்துறை ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலம் நபர் ஒன்று ரூ. 170 வீதம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 62 பேர்கள் வீதம் மாநிலம் முழுவதும் ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் ரூபாய் தொழிற் கருவிகள் வாங்க ஆண்டுதோறும் இனமாகக் கொடுத்துவருகிறது.

டோபிகானா கட்டுவதற்கு ஆண்டு ஒன்று ஐந்து இலட்சம் ரூபாய் மானியமாகவும் — கடனாகவும் நகராட்சிகளுக்கும் — ஊராட்சிகளுக்கும் கொடுத்து உடனடியாக கட்டித்தர ஏற்பாடு செய்திருக்கிறது கழக அரசு.

சலவைத் தொழிலாளர் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து அரிசனங்களுக்கு அளிக்கப்படும் கல்விச் சலுகையைப் போன்று சலவைத் தொழிலாளர் மாணவர்களுக்கும்அளித்து வருகிறது கழக அரசு.

ஆகவே, கலைஞர் தலைமையிலே அமைந்துள்ள தி. மு. கழக அரசுக்கு — தொழிலாளர் அரசுக்குச் சலவைத் தொழிலாளர்கள் முழு ஆதரவு தருவோம் — உறுதுணையாக இருப்போம் — உறுதியோடு இருப்போம் என்று தெரிவித்திக் கொள்கிறோம்."

முன்னாள் பாகிஸ்தான் கவர்னருக்கு ஆயுள் தண்டனை

வங்க தேச நீதிமன்றத்தில் தீர்ப்பு

டாக்கா, நவ. 21—

முன்னாள் கிழக்குப் பாகிஸ்தானின் கவர்னராக இருந்த டாக்டர் ஏ. எம். மாலிக்குக்கு தனி நீதிமன்றம் ஒன்று 6 நாட்கள் விசாரணை நடத்தி ஆயுள்தண்டனை விதித்தது.

டாக்டர் மாலிக்குக்கு 70 வயதாகிறது; பாகிஸ்தான் இராணுவ நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்ததாக அவர்மீது சாட்டப்பட்ட எல்லாக் குற்றங்களையும் அவர் செய்திருப்பதாக தீர்ப்புக் கூறியது. 21 பக்கத் தீர்ப்பைப் படிக்கும்போது அவர் பதட்டத்துடன் காணப்பட்டார்.

தீர்ப்புக்குப் பின் அவர் பலத்த போலீசுப் பாதுகாப்புடன் ஒரு வேனுக்குக் கொண்டுபோகப்பட்டபோது அங்கு கூடியிருந்த கூட்டத்தினர் ஆத்திரத்துடன் அவரை எதிர்த்துக் கூச்சலிட்டனர்.

நீதிபதி பிற்பகல் மூன்று மணிக்கு நீதிமன்ற அறைக்குள் நுழைந்தார் இருப்பிடத்தில் அமர்ந்துகொண்டிருந்த மாலிக், மற்றவர்களுடன் நீதிபதிக்கு மரியாதை செலுத்தும் வகையில் எழுந்து நின்றார்; 'என்னுடைய தீர்ப்பைப் படிக்கும் வரையில் தயவுசெய்து உட்காருங்கள்' என்று நீதிபதி அவரிடம் கூறினார்.

சென்ற டிசம்பர் 16-ந் தேதியன்று இந்தியா-வங்க தேசக்கூட்டு இராணுவத் தலைமையிடம் பாகிஸ்தான் இராணுவத்தினர் சரணடைவதற்கு இரண்டு நாட்களுக்குமுன் மாலிக் கவர்னர் பதவியை இராஜிநாமா செய்தார்.

மன்னிப்புக்கு இடமுண்டு — நல்ல புத்தி ஏற்படுமா?

டாக்கா, நவ. 21—

வங்க தேசத்தைப் [illegible]ஸ்தான் அங்கீகரிப்பதை எளிதாக்கக் கூடிய வழி ஒன்றை வகு[illegible] காட்டியிருக்கிறார் — வங்க தேசத் தலைமையமைச்சர் முஜிபுர் [illegible]மான்.

"வங்க தேசத்தைச் [illegible]ரழித்தவர்கள் அதற்காக எங்களிடம் இரங்கமாக மன்னிப்பு [illegible] கேட்க வேண்டும்; அத்துடன், இச்செயலுக்குத் தாங்கள் வருந்[illegible]வதாக உலகத்தினரிடமும் சொல்ல வேண்டும்; அப்படிச் [illegible]ய்தால் வங்க தேச மக்கள் அவர்களை மன்னித்துவிடுவது இயல்[illegible]னதே ஆகும்" என்று அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

"சரித்திரத்தில் இது[illegible]ான்ற மிருகத்தனமான ஒரு கொடுமை நடந்ததே இல்லை; ஆ[illegible]ம், அதை மன்னித்துவிட மக்கள் தயாராக இருக்கிறார்கள்; பா[illegible]ஸ்தானியருக்கு நல்ல புத்தி பிறக்க வேண்டுமென்று விரும்பு[illegible]றேன்" என்றும் அவர் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

வங்க தேசத் தலைமை[illegible]மைச்சரின் இந்தக் கருத்துக்குப் பாகிஸ்தான் அதிபர் பூட்டோ எ[illegible]த அளவுக்கு மதிப்புத் தருவார் என்பதை இப்போது அறுதியி[illegible]க் கூறுவதற்கில்லை!

வங்கதேசத்தில் பாகி[illegible]தான்இராணுவத்தினர் நடத்திய கொலை — கொள்ளை — சித்திரவதை [illegible]தீயிடல் — கற்பழித்தல் ஆகிய செயல்களை மூடி மறைக்க பாகி[illegible]ான் முனையுமானால், இந்தத் துணைக் கண்டத்தில் அமைதி நில[illegible]வதற்கு இடமிருக்காது!

இந்தக் கொடூரச் செயல்களுக்கு மூலகாரணமானவர்கள் எனக் கருதப்படும் மி[illegible]ப்பெரும் எண்ணிக்கையினரைக் 'குற்றவாளி'க் கூண்டில் ஏற்[illegible]மல், அடையாளபூர்வமாகச் சிறிய எண்ணிக்கையினர்மீது வி[illegible]ாரணை நடக்குமானால், அது தமக்கு ஏற்புடையதாக இருக்கு[illegible] — என்ற நிலையில் அதிபர் பூட்டோ இருப்பதாகத் தெரிகிறது; [illegible]னவே, முஜிபுர் ரகிமானின் சூசகமான அறிவிப்புக்குச் சற்று தா[illegible]ள மனத்துடன் பூட்டோ மன்னிப்புக் கேட்க முன்வருவாரா என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினையாகும்.

அடையாளபூர்வமான விசாரணைக்காக சிலரை வைத்துக் கொண்டு கணிசமான எண்ணிக்கையில் மற்ற போர்க் கைதிகளை விடுவித்துவிட்டால், வங்க தேச அரசுக்கு அங்கீகாரம் அளிப்பது இயலக்கூடியதாகலாம் என்பது பூட்டோவின் எண்ணம்போலும்!

வங்க தேசக் குடிமக்கள் ஐந்து இலட்சம் பேர், பாகிஸ்தானில் 'சிறைவாச' நிலையில் இருந்துவருகின்றனர் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை; எனவே, பாகிஸ்தான் போர்க் கைதிகளின் விடுதலையையும் — வங்க தேசக் குடிமக்களைத் திரும்பி அனுப்புவதையும் ஒன்றாக இணைத்து நடவடிக்கை எடுக்க பூட்டோ விரும்புகிறார்; இதனை வங்க தேசம் ஏற்க இயலுமா?

வங்க தேசக் குடிமக்களின் விடுதலைப் பிரச்சினை, மனித உரிமையின் அடிப்படையில் நடைபெற வேண்டிய ஒன்றாகும்; போர்க் கைதிகளின் விடுதலைப் பிரச்சினை — பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு காணும் பணியாகும்; இரண்டையும் ஒன்றாக இணைக்க முயற்சித்தால், அதனால் பலன் ஏதும் ஏற்படப் போவதில்லை என்பது கண்கூடானதாகும்.

வங்க தேசத்திற்கு அங்கீகாரம் அளித்துவிட்டுப் பேசுவதானால் தான், பூட்டோவின் எண்ணப்படி போர்க் கைதிகளின் விசாரணை உள்ளிட்ட எல்லாப் பிரச்சினைகளிலும் கணிசமான உடன்பாடு காண இயலக்கூடும் என்பதே இன்றைய நிலையாகும்.

அண்ணா ஏற்றித் தந்த அகல் விளக்கு

எத்தனை இடையூறு நேர்ந்தாலும் அணையாமல் காப்போம்

காஞ்சி கண் சிகிச்சை முகாமில் கலைஞர் சூளுரை

காஞ்சிபுரம் நவ. 21—

"எந்த முதலமைச்சரும் செய்யாத திட்டத்தை நான் தொடங்கியிருப்பதாக இங்கு புகழ்ந்து பேசினார்கள். இந்தக் கண்ணொளி வழங்கும் திட்டம் நான் தொடங்கியது அல்ல; எங்களை வளர்த்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கிய திட்டமாகும்.

"அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற கடமைகளை — காரியங்களை, எதுவந்தாலும் — இடி இடித்தாலும் — மின்னல் வெட்டினாலும் அவைகளையெல்லாம் சமாளித்து சமதர்ம சமுதாயம் அமைக்க அவர் ஏற்றித் தந்த அகல் விளக்கை அணையாமல் அத்தனை பேரும் காத்து நிற்போம்"

என்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், காஞ்சி கண் சிகிச்சை முகாமில் பேசுகையில் கூறினார்.

காஞ்சிபுரத்தில் நடந்த இலவசக் கண் சிகிச்சை முகாமில் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் விழா நேற்று நடந்தது.

விழாவுக்கு சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார்.

மாவட்டக் கலெக்டர் ந[illegible]சன் வரவேற்றும் பேசினார்.

525 பேர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை முதலமைச்சர் கலைஞர் வழங்கிப் பேசுகையில் கூறியதாவது:—

"இந்தக் கண்ணொளி வழங்கும் திட்டம் கடந்த [illegible] மாதம் தொடங்கப்பட்டது; கடந்த 6 மாதத்தில் 26 இடங்களில் இலவசக் கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதுவரையில் மொத்தம் 1,22,555 பேர்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் கண்ணொளி வழங்கப்பட்டுள்ளது, இதில் 19,697 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்காக இதுவரையில் 10,96,000 செலவிடப்பட்டுள்ளது.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களுக்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பார்வை இழந்தவர்கள் 10 இலட்சம் பேர் இருக்கிறார்கள்; இந்த ஆண்டு மட்டும் ஓர் இலட்சம் பேர்களுக்காவது கண்ணொளி வழங்கிட வேண்டும் என்ற முனைப்புடன் தீவிரமாகத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வசதி வாய்ப்பு அற்றவர்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ள கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு ரூ. 40 இலட்சம் வசூல் ஆகியுள்ளது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஏற்கனவே அனகாபுத்தூர், அம்பத்தூர் ஆகிய இடங்களில் இலவசக் கண் சிகிச்சை முகாம் நடந்துள்ளது; இது 3-வது முகாம் ஆகும்.

அடுத்த மாதம் கும்மிடிப்பூண்டி—திருத்தணி—செங்கற்பட்டு ஆகிய இடங்களில் நடக்கிறது.

இன்னும் 8 முகாம்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாடு வீட்டு வசதிகள் வாரியத்தின் தலைவராக இருக்கும் டி. வி. வாசுதேவன் ஐ. ஏ. எஸ்., சேலம் உருக்காலைத் திட்டத் தனி அதிகாரியாக நியமிக்கப்படுவார்.

சென்னையில் பாலங்கள் சீரமைப்பு

ரூ. 35.30 இலட்சம் செலவில் திட்டம்

சென்னை, நவ. 21—

மாநிலக் கல்லூரிக்கு அருகில் வந்து சேரும் பைகிராப்ட்ஸ் சாலையில் உள்ள பக்கிங்காம் கால்வாய் வாராவதி – இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அலுவலகம் அருகில் எட்வர்டு எலியட்ஸ் சாலையில் உள்ள பக்கிங்காம் கால்வாய்ப் பாலம்—சென்ட்ரல் இரயில்வே நிலையத்திற்கும் – மூர்மார்க்கெட்டுக்கும் நடுவில் வரும் காக்ரேன் கால்வாய்மீது உள்ள பூவிருந்தவல்லி வாராவதி மூன்றும் விரைவில் சீரமைக்கப்படும்.

சாலைகளை அகலமாக அமைத்தும், கனமான லாரிகள் போவதற்குரிய வகையில் தாங்கும் சக்தி உள்ளதாகவும் இப்பாலங்கள் சீரமைக்கப்படும்.

மொத்தம் ரூ. 35.30 இலட்சம் செலவில் இப்பணிகள், வரும் சனவரியில் துவங்கும்.

சென்ட்ரல் இரயில்வே நிலையம் அருகில் உள்ள பாலத்தின் சீரமைப்புக்கு ரூ. 16 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது; 72 அடி அகலமுள்ள சாலை அமையும்; இதில் 6 வரிசை வண்டி போக்குவரத்துக்கான வழி அமையும்.

எட்வர்டு எலியட்ஸ் சாலைப் போக்குவரத்து ரூ 10.30 இலட்சமும் — பைக்ராப்ட்ஸ் சாலை பாலத்துக்கு ரூ. 9 இலட்சமும் செலவாகும். இவ்விரு பாலங்களிலும் 48 அடி அகலம் சாலை அமையும்; சாலையில் 4 வரிசை வண்டிகள் போகலாம்.

வரும் சனவரி மாதத்தில் இப்பணிகள் ஆரம்பமாகும்.

கோட்டைக்கு அருகில் பக்கிங்காம் கால்வாய் மீதுள்ள வாலாஜா பாலத்தைப் புதுப்பிக்கும் பணி நடந்துகொண்டிருக்கிறது.

சேமியர்ஸ் சாலையில் ரூ. 6.40 இலட்சம் செலவில் பாலச் சீரமைப்புப் பணிக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

நந்தனத்திலுள்ள டர்ன்புல் சாலையிலிருந்து கோட்டூருக்குச் செல்ல அடையாறுமீது ரூ. 27 இலட்சம் செலவில் பாலம் கட்டும் யோசனை உள்ளது.

பூங்கா சுரங்க வழி

பூங்கா இரயிலடிக்கும் — மூர்மார்க்கெட்டுக்கும் இடையில் நடந்துசெல்வோர் பூவிருந்தவல்லி சாலையைக் கடக்க ரூ 12.66 இலட்சம் செலவில் சுரங்கப் பாதைக்கான வேலை விரைவில் துவக்கப்படும்; சுரங்கப் பாதை 16 அடி அகலம் இருக்கும்.

நெசவாளர்களுக்குப் பிராவிடண்டு நிதி வசதி

திட்டம் பரிசீலிக்கப்படுவதாகத் தகவல்

கும்பகோணம், நவ. 21—

"நெசவாளர்களுக்கான பிராவிடண்டு நிதி துவங்கும் பிரச்சினை குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது"

என்று கைத்தறித் துணி ஏற்றுமதிக் குழுத் தலைவர் திரு. கே. சந்தானம் இங்கு கூறினார்.

நெசவாளர்கள் மற்றும் பிறர் கொண்ட கூட்டத்தில் பேசுகையில், இத்தொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"நெசவாளர்களின் சம்பளத்தில் ரூபாய் ஒன்றுக்கு 4 காசு நெசவாளர்களும் — 2 காசு மாஸ்டர் நெசவாளர்களும் அல்லது உற்பத்தியாளர்களும் — 6 காசு அரசும் போடுவது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது; இது சம்பந்தமாக யோசனைகள் வரவேற்கப்படுகின்றன."

குழுவின் அறிக்கை சனவரி இறுதியில் அரசுக்கு அளிக்கப்படும்.

நெசவாளர்களுக்குச் சங்கங்கள் வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும், தமிழ்நாடு முழுவதற்குமான அடிப்படையில் நெசவாளர் ஊதிய விகிதங்கள் சிக்கனச் சீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்றும், ஊதியத்தில் ஏற்றத் தாழ்வுகள் உள்ளன என்றும் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் கூறினர்.

மதியழகன் யோசனையின் மூலவர்

"இப்போது தமிழகத்தில் [illegible]பட்டுள்ள பிரச்சினைக்கு சபாநாயகர் மதியழகன் ஒரு வழி [illegible]லியிருக்கிறார்; அதன்படி செய்யட்டும்; அல்லது அவர்க[illegible] (தி. மு. க. ஆட்சியாளரே) வேறு ஏதாவது நல்ல வழியாக[illegible]சொல்லட்டும்"

—மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம்

மதியழகன் யோசனையின் [illegible]லகர்த்தா யார் என்பது இப்போது புரிந்துவிட்டது!

மதியழகன் கூறிய நகல் அவர[illegible] சொந்த யோசனையில்லை — அது டில்லியிலிருந்து இறக்குமதி[illegible]ானது — அந்த யோசனையை எடுத்துத் தந்தவர் சாட்சாத் சி. சுப்பிரமணியம்தான் என்பது தமிழ்நாட்டுக்கு இப்போதுதான் தெரியவருகிறது!

இந்தப் பிரச்சினை வழக்கு மன்றத்தில் இருக்கும்போது ஒரு மத்திய அமைச்சர் இங்குவந்து, அதே பிரச்னைமீது கருத்தறிவிக்கலாமா?

வழக்கறிஞருமான மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியமே இப்படிப் பேசுவது சரியா? நீதிமன்றத்தில் மதியழகனின் வாதத்துக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்தது ஆகாதா?

‘சதி’ செய்யத் தேவையில்லை

காமராசருடன் வெளிப்படையாகவே சந்தித்துப் பேசுவேன்

செய்தியாளரிடம் முதல்வர் கலைஞர் அறிவிப்பு

சதிக் கூட்டத்தில் சிக்கிக்கொண்டிருப்பவர்களுக்கு இடித்துரை

சென்னை, நவ. 22—

" ‘ஆட்சியை விட்டாலும் காமராசரிடம்தான் விடுவோம் என்று கருணாநிதி பேசியிருப்பதைப் பார்க்கும்போது, காமராசருக்கும்--கருணாநிதிக்கும் இடையே ஏதோ சதி இருப்பதாகவும், இரகசிய ஒப்பந்தம் இருப்பதாகவும் தெரிகிறது’ என்று சென்னையில் நடந்த கூட்டத்தில் எம்.ஜி ஆர். பேசியிருக்கிறாரே--இது பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்" என்று முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் செய்தியாளர்கள் வினவியபோது அவர் குறிப்பிட்டதாவது:—

"காமராசரும்--நானும் பகிரங்கமாகப் பேசுவோமே தவிர சதி செய்ய வேண்டியதில்லை; ஏதாவது பேச வேண்டும் என்றால் வெளிப்படையாகவே பேசியிருக்கிறோம்; சென்ற ஆண்டுகூட ஒரு தடவை நானும்--அவரும் சந்தித்துப் பேசியிருக்கிறோம், நாங்கள் சதி நடத்துவதற்காகச் சந்தித்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை; சதித் திட்டம் வகுப்பதற்காகவே தமிழ்நாட்டில் வேறு சில கட்சிகள் இருக்கின்றன; அதில் போய் சிக்கிக்கொண்டிருப்பவர்கள் யார் என்பதை நாடே அறியும்."

பாதுகாப்பு தரும் நிலை

கேள்வி:—"26-ந் தேதி தி.மு. கழக எம்.எல்.ஏ.-க்கள் வீட்டுக்கு ஊர்வலமாகப் போய் எம்.ஜி. ஆர். கட்சியினர் ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறார்களே--அந்த எம்.எல்.ஏ.-க்களின் வீடுகளுக்குப் போலீசும் பாதுகாப்பு கொடுக்கப்படுமா?"

பதில்:—"போலீசார் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்."

தலைமையமைச்சருக்கு அனைத்தும் தெரியும்

கேள்வி:—"சபாநாயகர் மதியழகன் கூறியதுபோல் சட்டசபையைக் கலைத்து மறு தேர்தல் நடத்துவது ஒரு நல்ல யோசனைதான்--என்று டெல்லி அமைச்சர் சி. சுப்பிரமணியம் பேசியிருக்கிறாரே -- அதுபற்றித் தலைமையமைச்சர் இந்திராவுக்கு நீங்கள் எழுதப்போகிறீர்களா?"

பதில் :—"தலைமையமைச்சருக்கு நான் எழுதாமலேயே எல்லாம் தெரியும்."

‘நவமணி’ பிரச்சினை

கேள்வி:—"‘நவமணி’ பத்திரிகையின் விவகாரம் பற்றி அரசு மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறதே!"

பதில்:—"இது நிர்வாகத்தினருக்கிடையே உள்ள தகராறு; ‘போலீசுப் பாதுகாப்பு வேண்டும்’ என்று கேட்கப்பட்டது; அதைக் கொடுக்காவிட்டால் ஏற்படும் விளைவுகளுக்கு யார் பொறுப்பு ஏற்பது? இதில் தலையீடு எதுவும் இல்லை."

நடக்க இருப்பவை

24--11--72

சிவகாசி

நகர தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு பாவடி தோப்புத் திடலில்; தலைவர் : கோ.வரதராசன்; பேசுவோர் : அமைச்சர் செ.மாதவன், எஸ். எஸ். தென்னரசு எம்.எல்.சி., பெ. சீனிவாசன் (சட்டப் பேரவைத் துணைத் தலைவர்), ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ., வி. தங்கபாண்டியன் எம்.எல்.சி., சுருளிவேல் எம்.எல்.ஏ., ஆண்டி என்னும் குருசாமி எம்.எல்.ஏ., எஸ். அழகுத்தேவர் எம்.எல்.ஏ.

தொழிற் சங்கக் கூட்டங்கள்

காட்டூர் கோபால் அறிவிப்பு

சென்னை, நவ. 23—

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைப் பொதுச்செயலாளர் காட்டூர் கோபால் எம்.எல்.சி. அறிவிப்பதாவது :—

கோவை மாவட்டத்தில் திரு. ஏ. எஸ். மணி தலைமையில் இயங்கி வந்த திராவிடப் பொதுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம், பேரவையில் இணைந்துள்ளது என்பதனைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் கீழ்க்காணும் தேதிகளில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் பேரவையில் இணைந்துள்ள முன்னேற்றச் சங்கங்களின் சார்பாகக் கீழ்க்காணும் தொழிலாளர் நிகழ்ச்சிகள் நடைபெறும் :—

நவ. 23 பிற்பகல் 3 மணி : முன்னேற்றச் சங்க ஊழியர்கள் கூட்டம்; இரவு 7 மணி : பொதுக்கூட்டம்.

நவ. 24 பிற்பகல் : சீரநாயக்கன் பாளையம் கைத்தறி நெசவாளர் கூட்டம்; மாலை : கோவையில் கைத்தறி நெசவுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க ஊழியர் கூட்டம; இரவு : தெப்பக்குளம் மைதானம்—பொதுக்கூட்டம்.

நவ. 25 : எஞ்சினீயரிங் தொழிலாளர் முன்னேற்றச் சங்க ஊழியர் கூட்டம்; இரவு : பொதுக்கூட்டம்.

நவ. 26 காலை : குன்னூரில் தோட்டத் தொழிலாளர் மாநாடு; மாலை 4 மணி : பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க ஊழியர் கூட்டம்; இரவு 7 மணி: பொதுக்கூட்டம்.

ஏனைய நிகழ்ச்சிகள் பற்றி அடுத்த பட்டியலில் தெரிவிக்கப்படும்.

திருமணம்

பம்பாய் — தாரா[illegible]வியிலுள்ள மதுரை முத்து மன்[illegible]த் தலைவர் வி. எஸ். சொக்கலி[illegible]கம் அவர்களின் மகன் செல்[illegible] சி. மதுரை மணிக்கும் -- செல்[illegible]சாந்திமதிக்கும் 22-11-72 கா[illegible]0 மணியளவில் மதுரை [illegible]ரதி சாலை, 85-எண்ணுள்ள இல்லத்தில், மதுரை மேயர் திரு. எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

நவ. 23 காலை : கோயம்புத்தூர்; மாலை 3 மணி : உடுமலைப்பேட்டை—தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்களின் உறுப்பினர்கள் கூட்டம்; இரவு 7 மணி: உடுமலைப்பேட்டை—பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 24 காலை 10 மணி: கோவை காமராசபுரம்—சுகாதாரத் தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்க வரவேற்பு; 11 மணி: கோவை—[illegible] பேகடரி தொழிலாளர் முன்னேற்றச் சங்க வரவேற்பு; நண்பகல் 12 மணி: வி. கே. கே. மேனன் ரோடு—விவசாயத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க வரவேற்பு; பிற்பகல் 1 மணி: கள்ளிமடை—விவசாயத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க வரவேற்பு; மாலை 5 மணி: சீரநாயக்கன்பாளையம் கைத்தறி நெசவாளர் முன்னேற்றச் சங்க வரவேற்பு; 6 மணி: லாலி ரோடு கைத்தறி நெசவாளர்கள் வரவேற்பு; இரவு 7 மணி: கோவைத் தெப்பக்குளம் வீதி—பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 25 மாலை 5 மணி: கோவை—எஞ்சினீயரிங் தொழிலாளர் முன்னேற்றச் சங்கங்களின் உறுப்பினர் கூட்டம்; இரவு 7 மணி: கோவை பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க உறுப்பினர் கூட்டம்.

நவ. 26 காலை 10 மணி: குன்னூர்—தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க மாநாடு.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா நிகழ்ச்சிகள்

நவ. 23 காலை 11 மணி: மதுரை—பொதுப்பணி, நெடுஞ்சாலைத் துறை வேலைகள் பற்றிப் பொறியாளர்களுடன் விவாதித்தல்.

நவ. 24: உடுமலைப்பேட்டைத் தொகுதி நிகழ்ச்சிகள்.

நவ. 25 காலை 10 மணி: உடுமலைப்பேட்டை—தமிழ்நாடு ஆளுநருடன் உடுமலை ஆய்வு மாளிகைத் திறப்பு விழாவில் கலந்துகொள்ளுதல்; பிற்பகல்: கோயமுத்தூர்.

நவ. 26 முற்பகல்: ஆம்பூர் நிகழ்ச்சிகள்.

செ. கந்தப்பன் எம்.எல்.ஏ. நிகழ்ச்சிகள்

நவ. 23 காலை 9 மணி: பள்ளிபாளையம்—ஊழியர் கூட்டம்; மாலை 3 மணி: கொங்கணபுரம்—ஊழியர் கூட்டம்; இரவு 7 மணி: இடைப்பாடி—பொதுக்கூட்டம்.

நவ. 24 காலை 9 மணி: குமாரபாளையம்—ஊழியர் கூட்டம்.

நவ. 25 காலை 9 மணி: திருச்செங்கோடு—ஊழியர் கூட்டம்; மாலை 3 மணி: மல்லசமுத்திரம்—ஊழியர் கூட்டம்; இரவ 7 மணி: குமாரபாளையம்—பொதுக்கூட்டம்.

நவ. 26 காலை 9 மணி: சலகண்டபுரம்—ஊழியர் கூட்டம்; காலை 11 மணி: தாரமங்கலம்—ஊழியர் கூட்டம்; மாலை 3 மணி: மேச்சேரி—ஊழியர் கூட்டம்; மாலை 5 மணி: மேட்டூர்—ஊழியர் கூட்டம்; இரவு 7 மணி: மேட்டூர்—பொதுக்கூட்டம்.

திருச்செங்கோடு வட்ட தி. மு. க. தோழர்களுக்கு

"தமிழக குடிநீர் வாரியத் தலைவர் திரு செ. கந்தப்பன் எம்.ஏ., எம்.எல்.ஏ. அவர்கள் கழகத்தின் ஆக்கப் பணிகள் குறித்துக்கீழ்க்கண்டவாறு கழகத் தோழர்களுடன் கலந்து உரையாடவும், பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவும் இருப்பதால், அந்தந்தப் பகுதியில் உள்ள கழகத் தோழர்கள் ஆங்காங்கு கலந்துகொள்ள வேண்டுகிறேன்"

என, திருச்செங்கோடு வட்ட தி.மு.க. செயலாளர் என். ஏ. நடேசன் அறிவிக்கிறார் :—

நவ. 23 காலை 10 மணி: பள்ளிப்பாளையம், மாலை 6 மணி: குமாரபாளையம்.

நவ. 24 காலை 10 மணி: குமாரபாளையம்.

நவ 25 காலை 10 மணி: திருச்செங்கோடு; மாலை 4 மணி: மல்லசமுத்திரம்.

‘என் செயல் சட்டவரம்புக்கு உட்பட்டதே’

‘நீதிமன்றத்துக்குச்செல்லவேண்டிய நிலை ஏற்படவில்லை’

உயர் நீதிமன்றத்தில் ஆளுநர் கே.கே.ஷா தாக்கல் செய்துள்ள எதிர் மனு

முதலமைச்சர் கலைஞர் சார்பிலும் எதிர் வாக்குமூலம் தாக்கல்

சென்னை, நவ. 22—

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் முந்திய கூட்டத் தொடர் முடிவடைந்துவிட்டதாக ஆளுநர் பிறப்பித்த உத்தரவு செல்லத்தக்கதல்ல; அதை ரத்து செய்யவேண்டும்" என்று கோரி அவைத் தலைவர் கே. ஏ. மதியழகன், எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் தாக்கல் செய்த 'ரிட்' மனு, நேற்று உயர் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகளைக்கொண்ட பெஞ்சின்முன் பரிசீலனைக்கு வந்தது.

ஆளுநரும் – முதலமைச்சரும் தமது பதில் வாக்குமூலங்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

"தமிழ்நாடு அரசையும் – சட்டப் பேரவையின் செயலாளரையும் பிரதிவாதிகளாகச் சேர்க்க வேண்டும்" என்று மனுதாரர்கள் இருவரும் மற்றும் இரு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

எல்லா மனுக்களின் பரிசீலனையையும், நவம்பர் 27-ந் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

தலைமை நீதிபதி கே. வீராசாமி-- நீதிபதி இராமபிரசாதராவ்--நீதிபதி சி. ஜே. ஆர். பால் ஆகியோர் புல் பெஞ்சின் நீதிபதிகளாவர்.

ஆளுநர் எதிர் மனு

ஆளுநர் கே. கே. ஷா தாக்கல் செய்துள்ள எதிர் மனுவில் கூறியிருப்பதன் கருத்தாவது :—

"அரசியல் சட்டத்தின் 361-வது பிரிவின்படி ஆளுநர் தமது செயல் எதற்கும் எந்த நீதிமன்றத்துக்கும் பதில் சொல்ல வேண்டியவர் அல்லர்; ஆளுநருக்கு எதிராக 'ரிட்' உத்தரவு பிறப்பிக்க அரசியல் சட்டத்தின் 226-வது பிரிவு, அதிகாரம் அளிக்கவில்லை.

சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்துவிட்டதாக அறிவிப்பதற்கு ஆளுநருக்கு உள்ள அதிகாரம் ஆட்சேபணைக்கு இடமில்லாததாகும்.

‘சட்டமன்றம் செயல்பட முடியாதபடி திடீரென அவைத் தலைவர் அதை ஒத்திவைத்து விட்டார்; அரசின் அவசரமான பணிகள் தொடர்ந்து நடைபெறச் செய்வதற்காக – முதலமைச்சரின் யோசனையின் மீது – சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுற்றதாக அறிவிப்பதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

அரசின் பணிகள் நடைபெறுவதற்கு தேவைப்பட்ட அவசரச் சட்டங்களின் நகல்கள் நவம்பர் 17-ந் தேதி எனக்கு அனுப்பப்பட்டன; அவற்றை நான் பரிசீலித்துக் கொண்டிருக்கையில் நீதிமன்றத்தின் நோட்டீசு வந்தது; அதை முன்னிட்டு நான் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை.

நான் நல்லெண்ணமில்லாமல் நடந்து கொண்டதாகக் குறை கூறியிருப்பதற்காக வருந்துகிறேன்.

தனது அதிகார வரம்புக்குள் ஆளுநர் அத்துமீறி தலையிட்டிருப்பதாக (மேலாதிக்கம் வகிப்பதாக) அவைத் தலைவர் கூறுவது முற்றிலும் தவறான அடிப்படையில் எழுந்த கருத்தாகும்; சட்டமன்றத்தின் அலுவல்களை -- நடத்திவைப்பதற்குப் பதிலாக தமது பணிகளுக்கு அப்பாற்பட்ட ஒரு காரணத்துக்காக அதை அவர் ஒத்திவைத்தபோது, அரசியல் சட்டத்தின்கீழ்சனநாயக நடைமுறை மீண்டும் செயல்படச் செய்வது கவர்னருக்குள்ள உரிமையும் கடமையுமாகும்.

அரசாங்கத்தின் தலையாய நலனைக் கருத்தில் கொண்டே சட்டமன்றத்தின் கூட்டத் தொடர் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது; ஆகவே, 'ரிட்' மனுக்கள் தகுதியற்றவை -- தள்ளுபடி செய்ய வேண்டியவை."

முதலமைச்சர் கலைஞர் எதிர் வாக்குமூலம்

முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் சார்பில் ஒரு எதிர் வாக்குமூலம் -- கவர்னரது நிலைக்கு ஆதரவாகத் தாக்கல் செய்யப்பட்டது; அதன் கருத்தாவது :—

"சட்டமன்ற அவைத் தலைவர் சட்டமன்றத்தை ஒத்திவைத்தது, ஏதேச்சாதிகாரமான -- ஏறுமாறான -- மனம் போன போக்கிலான செயலாகும்.

அவரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கு வந்திருந்த தீர்மானத்தின் பரிசீலனையைத்தவிர்க்கும் உள்நோக்கத்துடன் அவையை அவர் ஒத்திவைத்தார்.

சனநாயக விதிமுறைகளின்படி தனக்குரிய பணிகளை -- தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் நிறைவேற்ற இயலாதபடி அவர் தடை செய்துவிட்டார்.

அரசின் பணி எதையும் கவனிக்காமல் -- எதிர்பாராதவகையில் அவையை ஒத்திவைத்ததால், எல்லா நடைமுறைகளும் நிலை நின்று விட்டன.

நிதி மசோதாக்கள் சம்பந்தமாக அவசியமான சட்டம் இயற்றுவதற்கு --- வசதிக்கு -- வாய்ப்பு அளிப்பதற்காக சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுற்றதாக அறிவிக்கும்படி ஆளுநருக்கு யோசனை கூறினேன்.

அரசு மேல் நடவடிக்கை எடுக்குமுன், மனுதாரர்கள் நீதிமன்றத்தை அணுகி 'ரிட்' மனு தாக்கல் செய்துள்ளனர்."